முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாள், புதன்கிழமை
EA.No.1/2025
இன்
EP.No.14/2025
இன்
O.S No.288/1996
-----

முருகேசன் ... மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி

/ எதிர்/

1) கருப்பையா பிள்ளை (இறப்பு) ... 1ம் எதிர்மனுதாரர்/1ம் மனுதாரர்/ 1ம் வாதி

2) தாடகத்தி அம்மாள் (இறப்பு) ... 2ம் எதிர்மனுதாரர்/2ம்மனுதாரர்/ 2ம் வாதி

3) சகுந்தலா
4) சுலோச்சனா
5) செல்லப்பாண்டியன்
6) சாந்தி
7) அலெக்சாண்டர் ... 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 7 மனுதாரர்கள்/3 முதல் 7 வாதிகள்

8) S. முருகேசன் ... 8ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி

இம்மனுவானது 07.03.2026ம் தேதி என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.M.விஜய்பூமிநாதன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.T.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும் இருந்த வழக்கில், 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில், மனு மற்றும் எதிருரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மாண்புமிகு திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் 31.03.2010 ல் AS No. 46/2009 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய தாக்கல் செய்யப்பட்ட I.A No.03/2017ல் இறுதி தீர்ப்பு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள E.P No.14/2025ல் நிறைவேறுதல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டி கட்டளை 21 விதி 26ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

2.1) மேற்படி, அசல் வழக்கான OS No.288/1996 கீழமை நீதிமன்றத்தில் வாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் பேரில் வாதி மாண்புமிகு திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து AS No.46/2009ல் வாதிகளுக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, உத்தரவை நிறைவேற்ற வேண்டி வாதிகள் தரப்பில் E.P.No.14/2025 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்நிர் மனுதாரர் தரப்பில் திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் 31.03.2010ம் தேதி AS No.46/2009ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய IA No.3/2017தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எனவே, சமூக நீதிமன்றத்தின்

தீர்ப்பின் பேரில் நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கையை திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள IA No.3/2017ல் உத்தரவு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள E.P No.14/2025ல் நிறைவேறுதல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டி இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், நிறைவேற்றல் மனு விசாரணையே நிறுத்தி வைக்க கேட்டிருக்கும் பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது.

**தீர்மானிக்க வேண்டிய விசயம்** :

3. இந்த மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு :**

4. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், மாண்புமிகு திருமங்கலம் சார்பு

நீதிமன்றத்தில் AS No.46/2009ல் தாக்கல் செய்த IA No.3/2017ல் இறுதி உத்தரவு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள E.P No.14/2025ல் நிறைவேறுதல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டுமா என்பதே ஆகும்.

5. எதிர்மனுதாரர்களின் கற்றறிந்த வழக்கறிஞர், இந்த வழக்கு 2016 ஆம் ஆண்டில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றும், நிறைவேற்றுதல் மனு 2025 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும், இந்த மனு, நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளில் மேலும் தாமதத்தை ஏற்படுத்தும் வகையில் இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறும் கோரினார்.

6. இந்நிலையில், கீழ்க்கண்ட மாண்புமை சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பான

***The Hon'ble High Court of Madras***
***The Hon'ble Mr.Justice K.Ravichandrababu***
***C.R.P(NPD) NO.783 of 2010***
***Dated: 27.07.2012***

***K. Lakshmiammal***

***vs***

***D.S. Nagalakshmi***

... என்ற முன்தீர்ப்பு வழக்கின் பத்தி 8ல்,

*"From the perusal of the above provision under Order 21 Rule 26 of CPC, it could be seen that the executing Court shall stay the*

*execution of the decree for a reasonable time upon showing sufficient cause, to enable the judgment debtor to apply for stay either before the trial Court or before the Appellate court. Thus, the power vested on the executing court under Order 21 Rule 26 CPC is to be exercised only for a reasonable time and that too for the purpose of enabling the judgment debtor to apply before the trial court or the appellate Court seeking for stay of the executing proceedings. It is nothing but granting a breathing time to the judgment debtor to approach the appropriate forum and seek stay of the execution."*

*...என்று கூறப்பட்டுள்ளது.*

7. இந்த சூழ்நிலையில், CPC இன் ஆணை 21 விதி 26 இன் படி, ஒரு ஆணையை நிறைவேற்றுவதை சரியான காரணமின்றி நிறைவேற்றல் நீதிமன்றம் நிறுத்தி வைக்க முடியாது என்பதையும், மேலும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மட்டுமே தடை விதிக்க முடியும் என்றும் மேற்படி முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

8. இந்நிலையில், OS No.288/1996 இல் 05.12.2008ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அசல் நிறைவேற்று மனு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், CPC இன் ஆணை 21 விதி 26 இன் படி, அசல் வழக்கில் வழங்கிய தீர்ப்பாணையை நிறைவேற்றுவதை சரியான காரணமின்றி இந்நீதிமன்றம் நிறுத்தி வைக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டு, இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 11.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.11 16:36:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

<u>இணைப்பு</u> :

1. <u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> : இல்லை

2. <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | |
|---|---|
| ம.சா.ஆ.1– | 10.04.2017ம் தேதியிட்ட IA No.48/2018 in AS No.46/2009ன் மனு சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.2– | 19.09.2025ம் தேதியிட்ட EP No.14/2025ன் மனு சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.3– | 05.12.2008ம் தேதியிட்ட OS No.288/1996 மற்றும் OS No.287/2004ன் பொதுவான உத்தரவு சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.4– | 24.03.2009ம் தேதியிட்ட AS No.46/2009 in OS No.288/1996ன் அப்பீல் சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.5– | 28.02.2017ம் தேதியிட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மதுரை CC No.24/1999ன் தீர்ப்பு நகல். |

ம.சா.ஆ.6– 18.04.2023ம் தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் Crl.R.C (MD)No.570/2018 தீர்ப்பு நகல்.

3. **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை

4. **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.11 16:37:11 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

E.A.No. 1/2025
in
E.P.No. 14/2025
in
OS.No.288/1996
Order
D.D. 11.03.2026